Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

28.07.2023

**C.C No. 11/2021**

Depositions of – சுபிதா ..witness for ...Petitioner Side Witness - 2

| | | |
|---|---|---|
| Name | - | சுபிதா (PW- 2 ) |
| Father's and Husband's name | - | சுலைமான் |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17.11.2023.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**(1 முதல் 4 வரையான எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 4 வரையான எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை-**

நான் எரணம்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் மனுதாரர் சுமையா எனது மாமியார். கடந்த 06.06.2020ம் தேதி எனது மாமியாரும், மாமனாரும் எரணம்பட்டியில் உள்ள சுடுகாட்டிற்கு அருகில் உள்ள அவர்களுக்கு சொந்தமான தோட்டத்தில் காலை 11.00 வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது முரளி, சூர்யா, அறிவானந்தம், ராஜ்குமார் ஆகிய நால்வரும் எங்கள் தோட்டத்தில் இருந்த நுங்கு மரத்தை வெட்ட வந்தார்கள். எனது மாமியார் அவர்களிடம் சென்று எதற்காக நுங்கு மரத்தை வெட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு எனது மாமியாரை அசிங்கமாக பேசி , சட்டையை கிழித்து சேலையை உருவிட்டு கீழே தள்ளிவிட்டு விட்டார்கள். மேற்படி நால்வரும் சேர்ந்து எனது

மாமியாரின் வலது கையை ஒடித்து விட்டார்கள். எனது மாமா ஊனமுற்றவர் என்பதால் அவரால் தடுக்க முடியவில்லை. பின்னர் அவர்கள் எனது மாமியாரையும், மாமனாரையும் கொன்றுவிடுவேன் என்று மிரட்டி ஓடிவிட்டார்கள். பின்னர் போடி தாலுகா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். அங்கு நடவடிக்கை எடுக்கவில்லை. பின்னர் எஸ்பி அலுவலகத்திலும் சென்று புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை,. எனது மாமியாரை போடி அரசு மருத்துவமனைக்கு நானும், எனது மாமனாரும் சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். மறுபடியும் மேற்படி நபர்கள் எங்களை கொன்றுவிடுவதாக மிரட்டி வருகிறார்கள். மேற்படி நடந்த சம்பவத்தை நான் நேரிடையாக பார்த்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u> -** இல்லை.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL
Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.11.28 17:44:01 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.